# பெற்றோர்களுக்கான தகவல் Tamilisch

# எப்படி என்னுடைய குழந்தை 2 மொழிகள், டொச் மற்றும் குடும்பமொழியினைக் கற்கும்?




கட்டுரை: Dr. Michaela Ulich
படம்: Silvia Hüsler

**ஆரம்பகல்விக்கான அமைப்பு – IFP München**
அரசாங்க கூட்டுஅமைப்புக்களின் உதவியுடன் வேலை, சமூக ஒழுங்குமுறைகள், குடும்பம் மற்றும் பெண்களுக்கான அமைப்பு

## அன்பார்ந்த பெற்றோர்களே,

சிலவேளைகளில் உங்களை நீங்களே கேட்கக்கூடும் :
„எப்படி என்னுடைய குழந்தை டொச்மொழியினைக் கற்கும் ?" அல்லது
„சிறுவயது முதலே என்னுடைய குழந்தை இருமொழியினைக் கற்குமா?" அல்லது
„பிற்காலத்தில் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியுமா – உதாரணமாக பாடசாலையில்?"
நிறைய பெற்றோர்களுக்கு இப்படி ஒரு கேள்வியோ மற்றும் பல கேள்விகளோ எழக்கூடும். இவர்கள் மட்டுமல்லாது நிறைய மொழியாளர்களும் ஆராய்ச்சியாளர்களும் இந்த கேள்விகளுக்கு விடை தேடுகின்றார்கள்.
இதைகுறித்து நாங்கள் உங்களுக்குச் சில தகவல்களையும் வழிமுறைகளையும் தர விரும்புகின்றோம்.

***மொழிசார்பாக தங்களை நன்றாக மேம்படுத்திக்கொள்ள குழந்தைகளுக்குத் தேவைப்படுவன எவை?***

- **குழந்தைகளால் பலவேறு மொழிகளையும் கற்றுக் கொள்ள முடியும்**

உங்கள் குழந்தை இருவேறு மொழிகளிடையே வளருமாக இருந்தால் , உதாரணமாக வீட்டில் ஒரு மொழியும் பாலர்பாடசாலையில் டொச்மொழியும், அப்படியானால் அது உங்கள் குழந்தையின் எதிர்காலத்திற்கு ஒரு நல்ல சந்தர்ப்பமாகவே அமையும்.
ஆராய்ச்சிகள் தெரிவிப்பது என்னவென்றால் : சிறுவயது முதலே குந்தைகள் நன்றாக இரண்டு மொழிகளை (அல்லது மூன்று) பேசக் கற்கும், எப்போது என்றால் அவர்கள் இந்த மொழிகளில் மேற்கொண்டு ஊக்கப்படுத்தப்படும் பட்சத்தில் கற்றுக்கொள்வார்கள். தந்தையும் தாயும் வெவ்வேறு மொழியினைப் பேசுபவர்களாக இருப்பினும், அவர்கள் தன் தன் மொழியில் குழந்தையுடன் பேசினால் , குழந்தைகள் அவற்றையும் கற்றுக்கொள்ளும். ஆனால் முக்கியமான விடயம் என்னவெனில் , அதுவும் குறிப்பாக இளைய குழந்தைகளுக்கு , தெளிவான „மொழி விதிமுறைகள்" குடும்பத்தில் இருக்கவேண்டும். அதாவது குழந்தை ஒரு குறிப்பிட்ட மொழியில் ஒரு குறிப்பிட்ட நபருடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். அப்போதுதான் குழந்தைக்குத் தெரியும் „அம்மா இப்படிப் பேசுவார்கள், அப்பா இப்படி பேசுவார், சாப்பிடும் போது நாங்கள் இப்படிப்பேசுவோம் …"என்று.

- **பாலர்பாடசாலை உங்கள் குழந்தைகளுக்கு ஒரு சந்தர்ப்பமாக அமையும்**

பாலர்ாடசலையில் உங்கள் குழந்தை டொச்மொழி மற்றும் பல்வேறு விடயங்களையும் கற்றுக்கொள்கின்றது, அதாவது மொழிவளர்ச்சிக்கு – பின்பு பாடசாலைக்குத் தேவையானது – போன்ற முக்கிய விடயங்களை. அதனால்தான் பாலர்பாடசாலை ஒரு சந்தர்ப்பமாகவும் மிகவும் நல்லதாகவும் அமையும் எப்போது எனில், உங்கள் குழந்தை மூன்று வயதிற்கு மேல் தொடர்ச்சியாக ஒழுங்காக பாலர்பாடசாலைக்குச் செல்லும் பட்சத்தில். அப்போதுதான் பாடசாலைக்குப் போகும் காலம்வரையும் டொச்மொழியுடன் கலந்து வளர போதுமான கால அவகாசம் கிடைக்கும். இந்தக் கல்வியாளர்கள் டொச்மொழியினை ஒரு குறிக்கோளாகக் கொண்டு விளையாட்டுக்கள், பேச்சு, பாடல்கள் கவிதைகள், படப்புத்தகங்கள் மற்றும் கதைகள் ஊடாக முன்னேற்றுகின்றார்கள்.
ஆரம்பத்தில் உங்கள் குழந்தைகள் ஜேர்மன் மொழியை அறிந்திருக்காத பட்சத்தில், சிலவேளைகளில் அக்குழந்தை, பாலர்பாடசாலையில் தான் வீட்டில் பேசும் மொழியினை எக்குழந்தை பேசுகின்றதோ அதனையே நாடி நட்பு கொள்ளும். அது அக்குழந்தைக்கு அச்சூழலில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவும் சந்தோஷத்தை அனுபவிக்கவும் உதவும். நாளடைவில் அக்குழந்தை டொச் பேசும் குழந்தைகளையும் நண்பர்களாக தேடிக்கொள்ளும்.

- **உங்கள் குழந்தைகளுடன் நீங்கள் என்ன மொழியில் பேசுகின்றீர்கள்?**

சிலவேளைகளில் பெற்றோர்களுக்கு வழங்கப்படும் அறிவுரை என்னவெனில்: „உங்கள் குழந்தைகளுடன் டொச்மொழியில் பேசுங்கள், அப்பொழுதுதான் உங்கள் குழந்தைகளுக்குப் பிற்காலத்தில் பாடசாலைக்கு இலகுவாக இருக்கும்". இந்த அறிவுரை

தவறானது. எந்த மொழியினை நீங்கள் இலகுவாகவும் இயற்கையாகவும் திறமையாகவும் பேசுவீர்களோ அந்த மொழியிலேயே பேசுங்கள் - ***அனேகமாக அது தாய்மொழியாகவே இருக்கும்.*** இந்த மொழியில் தான் நீங்கள் அதிக சொற்களை அறிவதால் எப்படி வசனம் „அமைக்கப்படுகின்றது" என்பதை அறிவீர்கள், அதன்மூலம் உங்கள் குழந்தை ஒரு சரியான அடித்தளத்தை பெற்றுக்கொள்கின்றது, அது மற்றைய மொழிகளைக் கற்கவும் உதவுகின்றது. உதாரணமாக டொச்மொழி கற்பதில். ஒரு குழந்தை ஒரு மொழியை சரியாகக் கற்பதற்கு பல வருடங்கள் ஆகும். இக்கருத்து குழந்தை முதலாவதாகக் கற்கும் மொழிக்கு மட்டுமல்லாது தொடர்ந்து கற்கும் மற்றைய மொழிகளுக்கும் பொருந்தும்.

சில குழந்தைகள் ஒரு கட்டத்தில் (சந்தர்ப்பத்தில்) தனி ஒரு மொழியையே பேச விரும்புவார்கள். உதாரணமாக டொச் மொழி மட்டும். அந்த சமயத்தில் பெற்றோர்கள் குடும்ப மொழியில் அவர்களுடன் பேசினாலும் அவர்கள் டொச் மொழியில் தான் பதில் அளிப்பார்கள். இந்த சந்தர்ப்பங்கள் மிகவும் சாதாரணமானது. நீங்கள் தொடர்ந்து பொறுமையுடன் தாய்மொழியிலேயே உங்கள் குழந்தையுடன் பேசுவதனாலும் , குழந்தை வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் இந்த மொழியினை கேட்பதனாலும் , அது இழக்கப்போவது எதுவுமில்லை, அந்தக் குழந்தை கேள்வி ஞானத்தினால் இன்னும் கற்றுக்கொள்ளும், அத்துடன் நிச்சயமாக பிற்காலத்தில் இந்த மொழியினை திரும்பவும் பேசும்.

- **உங்கள் குழந்தையின் மொழிவளர்ச்சிக்கு நீங்கள் உங்கள் குடும்பத்தில் எடுக்கக்கூடிய நடவடிக்கை என்ன?**

மொழிவளர்ச்சிக்கு ஒரு குடும்பத்திலுள்ள தினசரி வாழ்க்கைமுறை அவசியமாக அமைகின்றது. குடும்பத்தில் குழந்தைகள் தங்கள் முதல் மொழியினை கற்றுக் கொள்கின்றார்கள். குடும்பத்தில் குழந்தைகளின் மொழிவளர்ச்சியை முன்னேற்றுவதற்கு உதவும் வழிமுறைகள் எவை ?

### 1. பேசுவதிலும் பகிர்ந்துகொள்வதிலும் ஆர்வத்தைக் காட்டுதல்

பேசுவதை பயிற்ச்சி பண்ண முடியாது, சிறுகுழந்தைகள் தினசரி கேட்பதினாலும் பேசுவதனாலும் அது வளர்ச்சியடைகின்றது. உதாரணமாக, விளையாடும் போதும் படப்புத்தகங்களைப் பார்க்கும் போதும், சேர்ந்து உணவருந்தும் போதும், அது விரும்பும் மனிதர்களுடன் கலந்துரையாடும் போதும். *தினசரி பேச்சுவார்த்தையானது உங்கள் குழந்தைக்கு மிகவும் முக்கியம்: உங்கள் குழந்தையுடன் உங்கள் வேலை சம்பந்தப்பட்ட விடயங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள், பாட்டன் பாட்டியைப் பற்றி, நீங்கள் கண்ட ஒரு சிறிய அனுபவத்தினை,* அத்துடன் உதாரணமாக நீங்கள் சமையல் செய்வதை குழந்தை கவனித்துக் கொண்டு இருந்தால், நீங்கள் என்ன சமையல் செய்யப் போகின்றீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். அத்துடன் உங்கள் குழந்தை நிறைய கேள்விகளைக் கேட்கும் போதும் இன்று தனக்கு கோபத்தை அளித்த விடயம் சந்தோஷத்தை அளித்த விடயம், பாலர்பாடசாலையில் நண்பர்கள் சொன்ன விடயங்கள் போன்ற நிறைய விடயங்களை உங்களிடம் பகிர்ந்துகொள்ளும்போதும் சந்தோஷப்படுங்கள். *விடயங்களைப் பகிர்ந்துகொள்ளும்போது சிறிதுசிறிதாக தன்னை வெளிப்படுத்தவும் தன்னுடைய ஆலோசனைகளையும் விருப்பங்களையும் வார்த்தைகள் மூலம் வெளிப்படுத்தவும் கற்றுக்கொள்கின்றது.*

குழந்தைகள் தங்களையும் சூழ்நிலைகளையும் சாதகமாக உணரும் போதும், தங்கள் தவறுகளை நினைத்து பயப்படாமல் இருக்கும் போதும் அவர்களால் நன்றாகக் கற்க முடிகின்றது. குழந்தைகள் மொழியுடனான விளையாட்டுக்களில் ஈடுபடும் போது புதிய அந்நிய வார்த்தைகளைக் கண்டுபிடிக்கின்றார்கள், அது அவர்களுக்கு வேடிக்கையாக இருப்பது மட்டுமல்லாது மொழிவளர்ச்சிக்கும் மிகவும் நல்லது. உங்கள் குழந்தை தவறாக ஏதும் சொல்லும்போது நீங்கள் திருத்துவீர்கள் ஆனால் அது வளர்ச்சிக்கு நல்லது அல்ல. குழந்தைகள் அடிக்கடி திருத்தப்படுவார்கள் ஆனால் அவர்கள் பேசுவதிலும் பகிர்ந்துகொள்வதிலும் உள்ள ஆர்வத்தினை சிலவேளைகளில் இழக்கின்றார்கள். குழந்தைகள் நிறைய கற்றுக்கொள்வதற்கும் தங்கள் மொழித்தகமைகளை மிகவும் திறமாக வளர்த்துக்கொள்ளவும் நிறைய செயல்பாடுகள் உள்ளன. அதற்குள் வாசித்துக்காட்டுதல், கதை சொல்லுதல், படப்புத்தகங்களைப் பார்த்தல், செய்யுள்களை சொல்வதும் பாடுவதும் போன்றவை முக்கியமாக அடங்கும்.

## 2. குழந்தைகளுடன் சேர்ந்து படப்புத்தகங்களைப் பார்த்தல்

*பெற்றோர்கள் உங்கள் குழந்தைகளுடன் அடிக்கடி – தினசரி மிகவும் நன்று– ஒரு படப்புத்தகத்தைப் பார்ப்பீர்களே ஆனால் அது மொழிவளர்ச்சிக்கு மிகவும் நன்று.* நீங்கள் உங்கள் தாய்மொழியிலுள்ள ஒரு படப்புத்தகத்தைப் பார்ப்பீர்களே ஆனால் அதன் மூலம் குழந்தை நிறைய விடயங்களைக் கற்றுக் கொள்கின்றது. அது பிற்காலத்தில் பாடசாலையில் கற்கும் முக்கியமான அனைத்து மற்றைய மொழிகளுக்கும் உதவியாக அமையும் என்பதை பல பரிசோதனைகள் எடுத்துக்காட்டியுள்ளன. சிலவேளைகளில் மூத்த சகோதரர்களோ, சித்தி மாமிமார்களோ, பாட்டனோ நேரம் கிடைக்கும் போது வாசித்துக்காட்டலாம்.

படப்புத்தகங்களைப் பார்க்கும் போதும் வாசித்துக்காட்டும் போதும் கவனிக்கப்படவேண்டிய முக்கிய விடயங்கள்,

♦ அது குழந்தைக்கும் வாசிக்கும் பெரியவர்களுக்கும் மகிழ்ச்சியை அளிக்க வேண்டும் (பெரியவர்கள் நிறைய கேள்விகளைக் கேட்கும் போது அது குழந்தையின் மகிழ்ச்சியை அழித்துவிடும்)

♦ பார்க்கும் படங்களைப்பற்றியும் கதையைப்பற்றியும் தன் மனதிற்குப்படுவதை குழந்தை நிறைய பேசக்கூடியதாக இருக்க வேண்டும்

உங்கள் வீட்டில் உங்கள் மொழியில் படப்புத்தகங்கள் இல்லாவிடினும் மற்றவர்களிடமிருந்து பெறமுடியாவிடினும் உங்கள் குழந்தைகளுடன் உங்கள் மொழியில் படப்புத்தகங்களைப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. அதாவது டொச்மொழியில் சொற்கள் இல்லாத அல்லது மிகக்குறைந்த சொற்களே உள்ள படப்புத்தகங்கள் உள்ளன. இந்தப் புத்தகங்களை நீங்கள் புத்தகக்கடைகளிலோ அல்லது பாலர்பாடசாலையிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம். ஆசிரியரிடம் விபரம் கேட்கவும். வீட்டில் இந்தப் புத்தகங்களை உங்கள் குழந்தைகளுடன் சேர்ந்து பார்த்து உங்கள் மொழியிலேயே படங்களைப்பற்றிப் பேசலாம். அதேநேரம் உங்கள் குழந்தையுடன் சேர்ந்து அந்தப்படங்களுக்கு அமைய ஒரு கதையினை நீங்கள் உருவாக்கலாம். அல்லது உங்கள் குழந்தை தானும் பாலர்பாடசாலையிலிருந்து படப்புத்தகம் கொண்டுவந்து அப்படங்களைப் பற்றியும் கதையினைப்பற்றியும் டொச்மொழியில் உங்களிடம் ஏதாவது விவரிக்கக்கூடும். அதேநேரம் இரண்டு மொழியில் அச்சிடப்பட்ட சிறுவர் புத்தகங்களும் புத்தகக்கடையில் கிடைக்கும். நீங்கள் மிக நன்றாக டொச்மொழி பேசுவீர்களேயானால் மாறுதலாக டொச்மொழியிலும் தாய்மொழியிலும் கதைகளை வாசித்துக் காட்டலாம். குழந்தைகளுக்கு விருப்பமான சிலபுத்தகங்கள் இருக்கும். அவற்றை அவர்கள் திரும்பத்திரும்ப கேட்கவும் வாசிக்கவும் விரும்புவார்கள். அதுவும் நன்று, அதன்மூலம் அவர்கள் அந்தமொழியில் ஒரு நெருக்கத்தை உணர்வார்கள்.

## 3. கதை சொல்லுதல்

குழந்தைகள் கதைகளை மிகவும் விரும்பிக் கேட்பார்கள். குழந்தைகள் அடிக்கடி கதைகளை தந்தை, தாய், மாமன் அல்லது பாட்டன் சொல்ல அல்லது வாசிக்கக் கேட்குமாயின் அதன் மூலம் தன் மொழியறிவை விருத்தி செய்யும். *அவர்கள் கதைகளை விளங்கிக்கொள்ளவும் தாங்கள் சுயமாகச் சொல்லவும் கற்றுக்கொள்கின்றார்கள். இது பிற்காலத்தில் பாடசாலைக்கு மிகவும் முக்கியமானதொன்று.* அது உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் விருப்பமான தினசரி வாழ்க்கையில் நடக்கும் கதைகளாக இருக்கலாம், கற்பனைக் கதைகளாக இருக்கலாம், குழந்தைப்பருவத்தில் நடந்த நிகழ்ச்சியாகவும் இருக்கலாம். தினமும் தூங்கப்போகுமுன் ஒரு கதை சொல்வதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

அதேநேரம் பாடல்கள், கைவிரல்களில் விளையாட்டுக் காட்டுவது, செய்யுள்கள் போன்றவையும் மொழியறிவு வளர்ச்சிக்கு மிகவும் முக்கியம். அதேநேரம் அவை நிறைய குழந்தைகளுக்கு சந்தோஷம் கொடுப்பவையாகவும் அமைகின்றன. உங்களுக்கும் உங்கள் குழந்தைப் பருவத்து கவிதைகள் செய்யுள்கள் ஞாபகம் இருக்கின்றனவா?

## 4. தொலைக்காட்சி போதுமானது அல்ல

தொலைக்காட்சி பார்க்கும் போது குழந்தைகளின் கவனம் அதில் வரும் படங்களில் நிலைத்திருக்குமே தவிர அதில் சொல்லப்படும் கருத்தில் அல்ல. *அதிகநேரங்களில் அதை*

*அமைதியாகவே நோக்குவார்கள். அதனால்தான் தொலைக்காட்சி மொழிக்கு நன்மையாகக் கருதப்படுவது இல்லை.* குழந்தைகள் கற்பனைக் கதைகளின் ஒலிநாடாவைக் கேட்கும் போதோ பொற்றோர்கள் படுக்குமுன் சொல்லும் கதைகளின் ஊடாகவோ நிறைய அறிந்து கொள்கின்றார்கள். உங்கள் குழந்தை தொலைக்காட்சி பார்க்கும்போது பார்க்கும் நிகழ்ச்சியைப்பற்றி உங்கள் குழந்தையுடன் உரையாடுவது முக்கியம்.

### 5. இரண்டு மொழிகளுடன் வாழும் குழந்தைகளுக்கு முன்மாதிரி தேவை

பெற்றோர்தான் மிகமுக்கிய முன்மாதிரிகள். *சில குழந்தைகள் தங்கள் பெற்றோர்கள் டொச்மொழி கற்பதற்கு எவ்வளவு முயற்சி செய்கின்றார்கள் என்பதை காண்கின்றார்கள்,* உதாரணமாக, உங்கள் குழந்தையிடம் ஒரு சொல்லினைக் கூறி அது டொச்மொழியில் எப்படி கூறப்படும் எனக்கேளுங்கள் அல்லது பாலர்பாடசாலையில் நடக்கும் ஒரு மொழிவகுப்புக்குச் செல்லுங்கள். அது உங்கள் குழந்தைக்கு உதவியாக இருக்கும். அவர்கள் தாங்களாகவே ஆர்வமடைவதுடன் டொச்மொழி கற்பதில் பெருமையும் அடைவார்கள். பெற்றோர்கள் தங்கள் தாய்மொழியைப் போற்றிப் பாதுகாக்கின்றார்களா என்பதையும் இரண்டாவது மொழியை முக்கியமானதாகக் கருதுகின்றார்களா என்பதையும் குழந்தைகள் உணர்ந்து கொள்வார்கள்.

### மொழி ஒரு சொத்து…....

உங்கள் குழந்தை இரண்டு மொழிபேசி பிற்காலத்தில் தன்னை நன்றாக வெளிப்படுத்துமே ஆனால் அது ஒரு பெரிய பொக்கிஷமாக அதனுடைய வாழ்க்கையிலும் தொழிலிலும் மேற்கொண்டு உதவும். இந்த சொத்தினை யாராலும் பறித்துக்கொள்ள முடியாது.
*நாங்கள் உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் இந்த வழியில் நல்ல வெற்றியினையும் அதிர்ஷ்டத்தினையும் பெற வாழ்த்துகின்றோம்.*